**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010**
**(மார்ச்-மே 2014) (வெளிவாரி)**

EASTERN UNIVERSITY
18 JUL 2014

# ECO 301 பணப்பொருளியல்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

01.(அ) பணத்தின் பிரதான பணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) பணத்துக்கான கேள்வி பற்றிய கெயின்சிய விளக்கத்தை சுருக்கமாகக் கூறி அவற்றில் உத்தேச நோக்கக் கேள்வி பற்றி வரைபட உதவியுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) பணத்துக்கான கேள்வி பற்றிய ரொபினின் (Tobin) நவீன ஆய்வு பற்றி ஆராய்க.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

02.(அ) பணநிரம்பல் என்றால் என்ன? விளக்குக.

(03 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் காணப்படும் பணநிரம்பல் தொடர்பான எண்ணக்கருக்களை வகைப்படுத்துக.

(05 புள்ளிகள்)

(இ) பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) பணநிரம்பல் அதிகரிப்பினால் ஏற்படும் பொருளாதார விளைவுகளை ஆராய்க.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

03.(அ) கேள்வித்தூண்டல் பணவீக்கம் மற்றும் செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) பிலிப்ஸ் வளையியை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) பணவீக்கம் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

04.(அ) இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) ஒரு மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் கடன் கட்டுப்பாட்டு கருவிகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05.(அ) மூலதனச் சந்தை என்றால் என்ன?

(03 புள்ளிகள்)

(ஆ) வணிக வங்கி ஒன்றின் முதன்மைப் பணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) பொருளாதார வளர்ச்சியில் வணிக வங்கியின் பங்குபற்றி ஆராய்க.

(06 புள்ளிகள்)

(ஈ) தற்காலத்தில் வணிக வங்கிச் செயற்பாடுகளின் நவீன வளர்ச்சி பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06.(அ) வேறுபட்ட நாணயமாற்று வீத முறைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நாணயமாற்று வீத முறையினை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) நாணயப் பெறுமதி இறக்கம் சென்மதி நிலுவைப் பிரச்சனைக்கு தீர்வாக அமையுமா? காரணங்கூறி விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07. “சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றின் நோக்கங்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை நிதி நெருக்கடியிலிருந்து பாதுகாப்பதாகும்.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) நுண்பாக நிதியியல்

(ஆ) இலத்திரனியல் பணம்

(இ) பணச்சுருக்கம்

(ஈ) பிஷரின் பணக்கணியக் கோட்பாடு

(4x5=20 புள்ளிகள்)